DM Jdumuna Kumam

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 73/2021**

2024- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13– ஆம் நாள் செவ்வாய் கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW2 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயராமன் | தொழில் | : | ஒப்பந்ததாரர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | சிவசாமி | வட்டம் | : | அரியலூர் |
| கிராமம் | : | அரியலூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 52/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

எனக்கு பூர்வீகம் அரியலூர் என்றால் சரிதான். தற்போது பிரச்சனைக்குரிய தாவா சொத்து எந்த இடத்தில் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் பேரளி வடக்கில் உள்ளது. பேரளி கிராமத்தில் உள்ள வாதியின் அனுபவம் பற்றி எனக்கு எப்படி தெரியும் என்றால் நான் அதன் அருகில் இந்திரா என்பவரிடமிருந்து 2012 ஆம் ஆண்டு இடம் வாங்கியுள்ளேன். நான் கிரயம் வாங்கியதற்கான ஆதாரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அது தொடர்பான வருவாய் துறை ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) எனக்கு கிரயம் கொடுத்த இந்திரா என்பவருடைய ஆவணங்களையோ, வருவாய் துறை தொடர்புடைய ஆவணங்களையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண். 111/1 M ஆகும். இந்த சொத்தை தான் நான் இந்திராவிடம் கிரயம் பெற்றேனா என்றால் ஆமாம். சர்வே எண். 111/1M ஆரம்ப காலத்தில் என்னவாக இருந்தது, தற்போது என்னவாக உள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் நான் வாங்கிய காலத்தில் இருந்து தற்போது வரை மண் ரோடாக உள்ளது.

3) பாதையாகவோ, வண்டி பாதையாகவோ இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி இடத்தை பாதையாக பயன்படுத்தி வருவதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். என்னை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல யார் வர சொன்னார்கள் என்றால் 1ம் பிரதிவாதி சொன்னதன் பேரில் நான் சாட்சி சொல்ல வந்தேன். 1ம் பிரதிவாதி அவருடை வாக்குமூலத்தில் சர்வே எண். 111/1M–க்கான பட்டா தனது பெயருக்கு தவறுதலாக கொடுக்கப்பட்டதாக ஒப்புக் கொண்டுள்ள விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண். 111/1 M–ல் 29 சென்டிற்கான பட்டா எனது பெயரில் உள்ளது.

4) அந்த பட்டாவை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் தாவா இடத்திற்கு எனது பெயரில் பட்டா இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பட்டாவில் 1ம் பிரதிவாதியின் பெயரும், செந்தில்குமார் என்பவரின் பெயர் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி பட்டா தங்கள் பெயருக்கு தவறுதலாக கொடுக்கப்பட்டதாக 1ம் பிரதிவாதியே ஒப்புக் கொண்ட நிலையில் அதற்கு நான் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வருவாய் துறை கோப்புகளின் படி தாவா சொத்தானது ஆரம்ப காலத்தில் இருந்த நிலவியல் பாதையாக இருந்து வருவதாக குறிப்பிட்டுள்ள விபரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5) நிலவியல் பாதையாக உள்ள இடத்தை பொதுவாக தனிநபர் யாருக்கும் பட்டா மாற்றம் செய்ய முடியாது என்றாலும், உரிமை கொண்டாட முடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது கிரய முன்னவரும், அந்த இடத்தை கிரயம் வாங்கியிருந்ததால் அவரிடமிருந்து நான் கிரயம் வாங்கினேன். இந்திராவின் கிரய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அதில் சர்வே எண். 111/1M பற்றி என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண். 111/1M–ன் தென்பகுதி பாதை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் என் கைவசம் தான் உள்ளதா என்றால் ஆமாம். அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியுமா என்றால் முடியும்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMC Court, Kunnam